வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

பொருள்:– விருப்பு பெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருத்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

**.பழநி நகராட்சி**

2021–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 –ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலவலகம், பழநி.
நாள்.08.10.2021

தனி அலுவலர்/ஆணையாளர்
பழநி நகராட்சி

**கூட்டப்பொருள்**

1) பழநி நகராட்சி அரசாணை நிலை எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்,13.09.2021–ன்படி பழநி நகராட்சி பகுதியில் 1.மண்சலைகளை தார்ச்சாலையாக மாற்றம் செய்யும் பணி,2.ஐஸ்வர்யா நகர் பூங்காவினை மேம்படுத்தும் பணி,3.சண்முகநதி மயானத்தில் புதிதாக LPG திரவ பெட்ரோலியம் வாயு மயானம் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | நீளம் மீட்டரில் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4ஐஸ்வர்யா நகர் பூங்காவினை மேம்படுத்தும் பணி | – | 31.50 |
| 2 | பழநி நகராட்சி பகுதி சண்முகநதி அருகில்LPG மின் மயானம் புதிதாக அமைக்கும் பணி | – | 146.00 |
| 3 | பழநி நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டு எண்.4,5,22–ல் உள்ள 4.287 கி.மீ நீள 16 மண்சாலைகளை தார்சாலையாக மாற்றியமைக்கும் பணி | 4.287 | 498.93 |
| | மொத்தம் | | 686.43 |

எனவே, மேற்கண்ட பணிகளை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022–ல் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கிட கோரி பிரேரணையினை மாவட்ட ஆட்சித்தலைவரின்பரிந்துரையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படிதிட்ட மதிப்பீட்டு தொகை ரூ.686.43 இலட்சத்தினை நகராட்சியின் நிதி நிலையினை கருதி, மேற்படி திட்டத்தினை முழு மானியமாக வழங்க கோரியும், அதற்கான நிர்வாக அனுமதி வழங்க கோரியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2187/2021/EA–2, நாள்.02.10.2021–இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, பழநி நகராட்சியில் அத்தியாவசிய பணிகளான ஒளிர்உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகையான 3214 எண்ணம் தெருவிளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம்

ஒப்பந்த அடிப்படையில் தோற்றுவித்துக்கொள்ள கருத்துரு பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது கீழ்க்கண்வாறு.

**<u>தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல்:</u>**

| வ.எண் | பணியின் விவரம் | தேவையான பணியாட்களின் அளவுகோல்கள் | அளவீடு | மொத்தம் | நகராட்சி நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஒளிர்உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல் | 600ஒளிர்உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பராமரித்தல் மின்கம்பியாளர்–1, | 5 | 5 | 0 | 5 |
| | | மின்உதவியாளர் –1 | 5 | 5 | 2 | 3 |
| | | மொத்தம் | | 10 | 2 | 8 |

மேற்கண்ட விவரப்படி இந்நகராட்சியில் ஒளிர்உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகை 3214 எண்ணம் தெருவிளக்குகளை எரியூட்டி பராமரிப்பு பணிகளுக்காக தேவையான பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு உரிய ஆணை பிறப்பிக்க ரூ.22,22,000/–க்கு கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குந, சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA–2, நாள்.02.10.2021–இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, பழநி நகராட்சியில் அத்தியாவசிய பணிகளான குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புளை இயக்கி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மலம் ஒப்பந்த அடிப்படையில் தோற்றுவித்துக்கொள்ள கருத்துரு பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது கீழ்க்கண்வாறு.

குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்:

| வ.எண் | பணியின் விவரம் | தேவையான பணியாட்களின் அளவுகோல்கள் | அளவீடு | மொத்தம் | நகராட்சி இருப்பு பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–3 | 2 | 6 | – | 6 |
| | | பராமரிப்பு உதவியாளர்–3 | 2 | 6 | – | 6 |
| 2 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–3 | 1 | 3 | – | 3 |
| | | பராமரிப்பு உதவியாளர்–3 | 1 | 3 | – | 3 |
| | | நீர் பகுப்பாய்வக உதவியாளர்–1 | 1 | 1 | – | 1 |
| 3 | குடிநீர் வடிகட்டி படுகை இயக்கி பராமரித்தல் | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர்–3 | 2 | 6 | – | 6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | குடிநீர் நீரேற்று நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர்–3 | 2 | 6 | – | 6 |
| | | பராமரிப்பு உதவியாளர்–3 | 2 | 6 | 2 | 4 |
| 5 | பூஸ்டர் நிலையம் | பராமரிப்பு உதவியாளர்–2 | 2 | 4 | | 4 |
| 6 | மேல்நிலைத் தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | 1LL முதல் 2LL–க்கு குறைவாக கொள்ளவு இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–1 | 3 | 3 | – | 3 |
| | | 5LL–க்கு அதிகமான கொள்ளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–3 | 6 | 18 | – | 18 |
| 7 | பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | குடிநீர் வாகனம் – 1 | | | | |
| | | ஓட்டுநர்–1 | 2 | 2 | 1 | 1 |
| | | துலக்குநர்–1 | 2 | 2 | – | 2 |
| மொத்தம் | | | | 66 | 3 | 63 |

மேற்கண்ட விவரப்படி இந்நகராட்சிக்கு குடிநீர் பராமரிப்பு பணிகளுக்காக தேவையான பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு உரிய ஆணை பிறப்பிக்க ரூ.1,71,07,000/–க்கு கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ளலாம்.

4) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் 02.10.2021–ம் தேதிய ந.க.எண். 21287/2021/EA2–ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டள்ளது. இந்த அளவுகோலின்படி பழநி நகராட்சிக்கு கீழ்க்காணுமறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl.No | Items | Requirement as per norms | Present strength | Balance Needed |
|---|---|---|---|---|
| 1 | BOV | 28 | 37 | '– |
| 2 | LCV | 16 | 7 | 09 |
| 3 | HCV | 5 | 4 | 01 |
| 4 | Tractor Dozer | 1 | – | 01 |
| 5 | Bobcat | 1 | – | 01 |
| 6 | Cleanliness Worker | 174 | 104 | 70 |
| 7 | Supervisor | 17 | 12 | 05 |
| 8 | Drover | 21 | 5 | 16 |
| 9 | Watchman | – | – | – |
| 10 | Electrician Grade–II | 1 | – | 01 |
| 11 | Electrician Helper | – | – | – |

மேற்காணும் பணியாளர்களுக்கு ஒரு நாளுக்காக ஊதிய விபரம் பின்வருமாறு

| Total Manpower | Cleanliness Worker | Driver | Electricain Grade–II | Supervisor |
|---|---|---|---|---|
| | 174 | 21 | 1 | 17 |
| Available | 104 | 5 | 0 | 12 |
| Gap | 70 | 16 | 1 | 5 |
| Proposed | 70 | 3 | 1 | 5 |
| Rate | 461.00 | 708.00 | 708.00 | 562.00 |
| Amount in Lakhs | 116.68 | 20.39 | 2.55 | 10.10 |
| Total Base Cost In lakhs | | | 149.72 | |
| Total estimated cost including GST, EPF, ESI, EPF admin, EDLI and agency charges | | | 177.43 | |

எனவே பழநி நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் 70 நபர்கள், மேற்பார்வையாளர்கள்5 நபர்கள் மற்றும் ஓட்டுநர்கள் 8 நபர்கள் மின்னாளர் 1 நபர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு ஒரு ஆண்டுக்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.1,77,43,000/– (ஒரு கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரம் மட்டும்) செலவினத்திற்கு பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், மேலும் மூன்றாண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,32,29,000/– (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும் செலவினம் ஆகும். இதற்கான கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது சுகாதார நலன் மற்றும் அத்தியாவசியம் கருதி கூட்டப்பொருள் அனுமதித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கூட்டத்தில் அனுமதிக்கலாம். இவ்வலுவலக நகர் மன்ற தீர்மான என் 1704, நாள்.08.10.2021.

5) பழநி நகராட்சிக்கு சொந்தமான இட்டேரி சாலை (உரக்கிடங்கு அருகில்) நகராட்சி தினசரி சந்தை மற்றும் கமிஷன் மண்டிகளில் கட்டண வசூல் செய்யும் உரிமத்திற்கு 22.11.2020 முதல் 21.11.2023 வரையுள்ள மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு திரு.கே.சரவணக்குமார், த/பெ காளிமுத்து, 339,நேருஜி சாலை,பழநி என்பவருக்கு செயல்முறை உத்திரவு வழங்கப்பட்டது.

இட்டேரி தினசரி சந்தை குத்தகைதாரர் திரு.கே.சரவணக்குமார் என்பவர் 04.10.2021 ஆம் நாளன்று ஆணையருக்கு வழங்கியுள்ள கடிதத்தில் அன்னாரின் குத்தகை காலம் கொரோனோ கால கட்டம் என்பதால் பெரிய நஷ்ட இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை உள்ளதாலும் இட்டேரி காய்கறி கமிஷன் மண்டிக்கு தனக்கு வழங்கிய குத்தகை உரிமத்தை ரத்து செய்யுமாறும், அன்னார் செலுத்தியுள்ள வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறும், கொரோனோ காலத்திற்கான இழப்பீடு தொகையை வழங்குமாறும் தெரிவித்துள்ளார்.

குத்தகைதாரர் திரு.கே.சரவணக்குமார் என்பவரின் விண்ணப்பத்தின் பேரில் அன்னாருக்கு வழங்கப்பட்ட இட்டேரி தினசரி சந்தை வசூல் உரிம குத்தகையை ரத்து செய்வதற்கும், மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

2. பழநி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் தென் பகுதியில் காலியிடத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஏற்கனவே மூன்றாண்டுகளுக்கு திரு.பி.பாலாஜி த/பெ பழனிச்சாமி, 12/2 , எருமைக்கார தெரு, பழநி என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் 31.12.2021 ஆம் ஆண்டு முடிவடைவதால் இந்த இனத்திற்கும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் பொது மற்றும் சிறப்பு ஏலக்கட்டுப்பாடுகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **குத்தகை உரிம இனத்தின் பெயர்** | **முன்வைப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்)** | **சால்வன்சி 01.10.2021க்கு பிறகு பெறப்பட வேண்டும்** | **சால்வன்சி இல்லாத பட்சத்தில் கூடுதல் பொறுப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இட்டேரி சாலை (உரக்கிடங்கு அருகில்) நகராட்சி தினசரி சந்தை மற்றும் கமிஷன் மண்டிகளில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | 4.00 | 10.00 | 4.00 |
| 2 | பழநி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் தென் பகுதியில் காலியிடத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 3.00 | 10.00 | 3.00 |

மேற்கண்ட ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கைகள் தினசரி நாளேடுகளில் விளம்பரம் செய்யவும் ஏல அறிக்கை புத்தக வடிவில் தயார் செய்யவும் மற்றும் இதர செலவினங்களுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சம் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5033/2021/அ1).

6) பழநி நகராட்சிக்கு சொந்தமான சுற்றுலா வாகனத்திற்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் 30.06.2021 ஆம் நாளன்று முடிவடைந்ததால் , மேற்படி குத்தகை உரிமையினை 01.7.2021 முதல் வசூலிக்கும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த உரிய விளம்பர அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏலதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கியும், நாளிதழில் மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்காணும் குத்தகை இனத்திற்கு குத்தகைதாரர்கள் கோரிய தொகை கடந்த ஆண்டு ஏலத் தொகையை விடவும், மூன்றாண்டு சராசரியை விடவும் குறைவாக இருந்ததால் சுற்றுலா வாகன குத்தகை உரிமத்திற்கு கடந்த 28.06.2021ம் நாளைய செயல்முறை உத்திரவின் படி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது.

இணை இயக்குநர் (நிர்வாகம்), நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11996/2018/ஆர்3, நாள்.29.05.2018 ல் பழநி நகராட்சி ஆணையருக்கு வழங்கிய தெளிவுரையில் நகராட்சி குத்தகை இனங்களை குத்தகைக்கு விடுதல் தொடர்பான நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையரது அதிகார வரம்பிற்கு உட்பட்டதால், நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய விதிமுறைகளின்படி நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

<u>28.09.2021 ஆம் நாளன்று பெறப்பட்ட ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விவரம்</u>

| | |
|---|---|
| 1.திரு.டி.என்.ராஜவர்மன்,<br>த/பெ நரசிம்மன், 15/1, ஜெ.என்.நகர் 3வது தெரு,<br>வள்ளுவர்காலணி, ஆணையூர், மதுரை – 625017 | **1,60,00,000/–** |
| 2.திரு.கழுவன்,<br>த/பெ.மகாலிங்க தேவர்,<br>4/403–1, பாமா நகர்,<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>மதுரை – 17 | 1,57,50,000/– |

சுற்றுலா வாகன குத்தகை உரிமத்திற்கு மேற்கண்டவாறு 5– வது முறையாக கடந்த 28.09.2021 ஆம் நாளன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. டி.என்.ராஜவர்மன், மதுரை என்பவர் ரூ.1,60,00,000/–க்கு (ரூபாய்.ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

நகராட்சிக்கு வருமான அடிப்படையில் கணக்கீட்டின்படி குத்தகை விவரம் கீழ்க்கண்டவாறு,

1. நகராட்சிக்கு துறை மூலம் வசூல் வருமானம்
   01.07.2021– 31.07.2021 வரை – 7,95,440/–
   01.08.2021– 31.08.2021 வரை – 2,80,460/–
   01.09.2021– 30.09.2021 வரை – 4,25,350/–
   மொத்தம் – 15,01,250/–

**துறை மூலம் வசூல் பணியில் உத்தேசமாக ஏற்படும் செலவினம்**

1. பணியாளர்களின் ஊதியம் 12 நபர்களுக்கு ஓராண்டிற்கு – ரூ.43,20,000/–
2. இரசீது புத்தக செலவினம் – ரூ.2,00,000/–

குத்தகைதாரருக்கு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டால் நகராட்சிக்கு வருவாய் ரூ.1,60,00,000/– ஆகும். துறை மூலம் வசூல் பணியினை ஒப்பிட்டு பார்க்கும் போது நகராட்சிக்கு துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டால் ஆண்டு ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.60,00,000/– குறைந்த அளவு வருவாய் மட்டுமே வருகிறது.

நகராட்சி நலன் கருதியும், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தெளிவுரையில் அறிவுறுத்தியவாறும், திரு.டி.என்.ராஜவர்மன்,மதுரை என்பவருடைய உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,60,00,000/–ஐ ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

சுற்றுலா வாகன குத்தகை உரிம இனத்திற்கு திரு.டி.என்.ராஜவர்மன் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,60,00,000/– கடந்த ஆண்டு குத்தகை தொகையை காட்டிலும் (ரூ.3,17,52,000) ரூ.1,57,52,000/– குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை காட்டிலும் (ரூ.3,02,64,000) ரூ.1,42,64,000/– குறைவாகவும் உள்ளது.

தற்சமயம் கொரோனோ வைரஸ் பரவலை மேலும் தடுக்கும் பொருட்டு தமிழக அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவிலிருந்து சுற்றுலா வாகனங்களின் வருகை முற்றிலும் குறைந்துள்ளது.

இதனால், கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சுற்றுலா வாகன குத்தகை உரிமத்திற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி பலமுறை கோரப்பட்டும், ஒருவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை.

சுற்றுலா வாகன நுழைவு கட்டண வசூல் கடந்த ஆண்டு (01.07.2020 முதல் 30.06.2021 வரை) குத்தகை உரிமதாரர் திருமதி.கே.ஜோதி என்பவர் கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பேருந்துகள் பழநிக்கு வருவது முற்றிலும் தடை செய்யப்பட்டதால் கடந்த ஆண்டு குத்தகை உரிமத் தொகையை முழுவதும் செலுத்தாமல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD) No.8039 of 2021 and WMP (MD) No.6137 of 2021 நாள்.12.07.2021 ஆம் நாளன்று வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது.

குத்தகை உரிமத்திற்கு மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சி நிதி நிலையை உயர்த்தும் பொருட்டும், துறை மூலம் வசூல் பணி மேற்கொள்வதால் ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சி நிர்வாக நலன் கருதியும் திரு.டி.என்.ராஜவர்மன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,60,00,000/– (ரூபாய்.ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) ஐ மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.4512/2020/அ1)

7) பழநி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி காந்தி தினசரி சந்தையில் நுழைவு வாயில்களில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் அதிலுள்ள ABC பிளாக்குகளில் உள்ள கடைகளில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 11.08.2021 ஆம் நாளன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு குத்தகைதாரர்கள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து

கொண்டனர்.

உரிம இனத்தின் பெயர் : நகராட்சி காந்தி தினசரி சந்தையில் நுழைவு வாயில்களில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் அதிலுள்ள ABC பிளாக்குகளில் உள்ள கடைகளில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

ஏலம்

ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை

ஒப்பந்தப்புள்ளி

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (வருடம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | திரு.எ.கருணாநிதி,<br>த/பெ.அமிர்த பாண்டிய நாடார்,<br>கனியகம், 445 , VG ராவ் நகர்,<br>சிவகிரிப்பட்டி, பழநி. | ரூ.52,50,100/- |
| 2 | திரு.பி.கே.வெங்கடாச்சலம்,<br>த/பெ.எ.கந்தசாமி,<br>5/1,சௌண்டம்மன் கோவில் கிழக்கு தெரு,<br>பழநி தாலுகா. | ரூ.52,00,000/- |

மேற்கண்டவாறு நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்களில் வரிசை எண்.2-ல் கண்டுள்ள திரு.எ.கருணாநிதி, த/பெ.அமிர்த பாண்டிய நாடார்,கனியகம், 445 , VG ராவ் நகர், சிவகிரிப்பட்டி, பழநி என்பவர் வருடம் ஒன்றிற்கு ரூ.52,50,100/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த ஆண்டை காட்டிலும் ரூ.12,25,975/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை காட்டிலும் ரூ.14,14,558/- அதிகமாக உள்ளதாலும், 3-வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும் திரு.எ.கருணாநிதி என்பவரின் உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலுகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிதி நிலையை உயர்த்தும் பொருட்டு முன் அனுமதி பெறப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4512/2020/அ1).

8) பழநி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவறைகளை மராமத்து செய்யும் பணிக்கு பொதுநிதி 2021-2022-ல் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள 13.07.2021-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1. | திரு.R,செல்லதுரை,<br>த/பெ..ராமசாமி கவுண்டர்,<br>அன்னமார் கோவில் தெரு,<br>அமரபூண்டி,பழநி (TK) | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.5000/- வங்கி வரைவோலை எண்.865104816 இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, நாள்.12.07.2021. |
| 2. | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ.R.ரெங்கசாமி,<br>16/195,பாட்டாளி தெரு,<br>அடிவாரம்,<br>பழநி-624601 | 0.14%- மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.5000/- வங்கி வரைவோலை எண்.865104780 இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, நாள்.12.07.2021. |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.R,செல்லதுரை, என்பவர் –0.02% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு** : வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.R,செல்லதுரை, –0.02% ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

9) பழநி நகராட்சிக்கு சொந்தமான பாலாறு சுத்திகரிப்பு நிலையத்தில் Raw Water–ல் 7 ஹச்.பி மோட்டார் 2, உந்து மோட்டார் 2, Flaculator.Clear Water மோட்டார் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் Starter, கோடைகால நீர்தேக்கத்தில் உள்ள மோட்டார்கள், காயில்கள் திண்டுக்கல் தொட்டியில் உள்ள மின்மோட்டார்கள், Starter–கள் சிவகரிப்பட்டியில் உள்ள சம்ப்–ல் உள்ள 2 மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிக்குட்பட்ட Sulice Valve–களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியினை குடிநீர்நிதி 2021–2022 –ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00/–இலட்சத்திற்கு 23.07.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1. | திருமதி.K,ரேணுகா தேவி,<br>1,பூலாம் பட்டி,<br>பழநி. | 0.30% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9900/– சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21–22/0002290, நாள்.23.07.2021. |
| 2. | திரு.N.கருப்புச்சாமி,<br>273, லட்சுமிபுரம்,<br>பழநி–624601 | 0.60%– மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9900/– சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21–22/0002292, நாள்.23.07.2021. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.K,ரேணுகா தேவி,, என்பவர் –0.30% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு** 1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்,
2) குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.4353/2007/இ2)

10) இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிரிவின் காரணமாக பணி ஓய்வு பெற்ற கீழ்காணும் 4 பணியாளர்களுக்கும் மற்றும் பணியிடைகாலமான 1 பணியாளரின் வாரிசுதாரருக்கும் சிறப்பு சேம நல நிதி திட்டத்தின் கீழ் நகராட்சி பங்கத் தொகையாக தலா ரூ.10,000/– வீதம் 4 பணியாளர்களுக்கும் ரூ.40,000/– ம் மற்றும் இறந்த பணியாளர் உட்பட ஐவருக்கும் சிறப்பு சேமநலநிதிக்குரிய வட்டி தொகை ரூ.86598/– ஐ வருவாய் நிதியிலிருந்தும் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் /பதவி | ஓய்வு/ இறப்பு நாள் | வட்டி தொகை | மாணிய தொ |
|---|---|---|---|---|
| 1 | திரு.ப.சேதுராமன்,<br>து.மேற்பார்வையாளர்<br>(ஓய்வு) | 31.05.2021 | ரூ.18197/– | ரூ.10,000/– |
| 2 | திருமதி. ஜோதி,<br>க/பெ.முருகன்.<br>து. பணியாளர். (ஓய்வு) | 30.06.2021 | ரூ.4076/– | ரூ.10,000/ |
| 3 | திரு.திருமூர்த்தி,(ஓய்வு)<br>த/பெ.சின்னான்,<br>து. பணியாளர். | 30.06.2021 | ரூ.26716/ | ரூ.10,000/ |
| 4 | திரு.P.தர்மராஜன், (ஓய்வு)<br>அ. உதவியாளர் | 30.07.2021 | ரூ.19059/ | ரூ.10,000/ |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | திரு.ராஜா, த/பெ. கருப்பன் (இறப்பு)<br>து. பணியாளர் | 29.04.2021 | ரூ.18550/ | – |
| | | | ரூ.86598/– | ரூ.40,000/– |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

11) 2021–2022 ஆம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் செய்ய ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய 09.08.2021 ஆம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டது அதில் வரப்பெற்ற விலைப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | K.M. சதுர்தீன்<br>நியூ ஸ்டார் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் சவுண்ட் சர்வீஸ், பழநி | ரூ.1,725/– |
| 2 | பி.ராமசாமி<br>ஸ்ரீ மீனாட்சி சவுண்ட் சர்வீஸ், பழநி | ரூ.2,050/– |
| 3 | நியு வேல்ஸ் ஒளி ஒலிப்பெருக்கி நிலையம், பழநி | ரூ.1,950/– |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.K.M. சதுர்தீன் அவர்களின் விலைப்புள்ளி ஏற்பது தொடர்பாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சி வரி வசூல் பணியினை துரிதப்படுத்தும் விதமான அவசியம் அவசரம் கருதி குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

12) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை K.DIS.NO.4296/P3/2016. நாள்.16.08.2016–ன்படி பழநி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பழநீ நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வாடுகள், பொது சுகாதார பிரிவு 3,4,5,6 மற்றும் உரக்கிடங்கு பகுதி தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பழநி நகராட்சியில் வீடு வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து ( மக்கும் / மக்காத) சேகரித்தல், தெரு பெருக்குதல், கால்வாய் சுத்தம் செய்தல், செடி, கொடிகள் வெட்டுதல், உரக்கிடங்கில் உரம் தயாரித்தல் குப்பைகளை தரம் பிரித்து வாங்குதல், தூய்மை பணிகளுக்கு இயங்கும் வாகனங்கள் இயக்குதல் ஆகிய பணிகளை தனியார் ஒப்பந்தம் (out Sourcing) மூலம் மேற்கொள் அனுமதி வழங்கியதின் அடிப்படையில், பழநி நகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை ந.க.எண்.5878/2018/எச்2, நாள்.01.09.2020–ன்படி, திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 81 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் Sun (Tamil Nadu) Security Management Services Pvt Ltd., Madurai என்ற நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 30.08.2021–வுடன் முடிவடைகிறது. எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யும் கால அளவு வரை அல்லது 01.09.2021 முதல் 31.08.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பணிகள் கால தாமதமின்றி செயல்படுத்த பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலைவிகித அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்து ஏற்கனவே பணி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.509/– வீதம் மற்றும் காப்பீடு இதர வரி பிடித்தங்கள், சீருடை (ஊதியத்தில் 5%) பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட பொருட்கள் (ஊதியத்தில் 5%) மற்றும் நிர்வாக செலவினம் (ஊதியத்தில் 5%) மற்றும் இதர செலவினங்களுக்கு சேர்த்து ஒரு வருட காலத்திற்கு ஆகும் மொத்த உத்தேச செலவின தொகை ரூ.1,80,22,000/– ஐ (ஒரு கோடியே எண்பது இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் பணி ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டதில் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| ஊதியம்(EPF உட்பட Employ & Employee contribution) (509x81x365) | 1,50,48,585 |
| ESI ( ஊதியத்தில் 4.75%) (24.18x81x365) | 7,14,882 |
| காப்பீடு, இதர வரி பிடித்தங்கள், சீருடை 5%,ஊதியத்தில் 5% | 7,52,429 |

| | |
|---|---|
| பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் ஊதியத்தில் 5% | 7,52,429 |
| நிர்வாக செலவினம் (5%) | 7,52,429 |
| மொத்தம் | 1,80,20,754 |
| இதர செலவினம் | 1,246 |
| மொத்த செலவினம் | 1,80,22,000 |

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரப் பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யும் கால அளவு வரை அல்லது 01.09.2021 முதல் 31.08.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கூட்டத்தில் அங்கிகரிக்கலாம். (ந.க.எண்.5878/2018/எச்2).

13) பழநி நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 33 வார்டுகளில் நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகிய வரியினங்களை 31.03.2022-க்குள் 100% வசூல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சிக்குட்பட்ட 01 முதல் 33 வார்டுகளிலும் 100% வரியினங்களை முழுமையாக வசூல்செய்யும் பொருட்டும், இந்நகராட்சி நிதிபற்றாக்குறையினை கருத்திற்கொண்டும் மற்றும் பொது மக்கள் தங்களின் சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, கடிநீர் கட்டணம் மற்றும் நகராட்சி கடைவாடகை ஆகியவற்றினை முழுமையாக செலுத்துவதற்கு விழிப்புணர்வு செய்யும் விதமாகவும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் அறியும் வண்ணம் 11.08.2021 முதல் 31.03.2022 வரை ஆட்டோ மூலம் ஒலிப்பெருக்கி வைத்து விளம்பரம் செய்வதற்கு அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) உத்தேச செலவினம் ஒதுக்கீடு செய்து வழங்க இந்நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1924/2017/அ2,அ3).

14) பழநி நகராட்சிக்கு சொந்தமான சமுதாயகூடம் ராஜாஜி சாலையில் அமைந்துள்ளது. அதில் புதிதாக சமையல் அறை மற்றும் முன்புறம் கழிவறை மற்றும் தெற்கு பக்கம் ஒரு கடை அமைத்துதருமாறு பொது மக்கள் கோரிக்கை வைத்தனர், அதனை நிறைவேற்றும் வகையில் புதிய சமையல் அறை, முன்புறம் கழிவறை மற்றும் தெற்கு பக்கத்திற்கு முன்புறம் கடை ஒன்று அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.50/- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

செலவினத்தை தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.123/2019/இ1)

15) பழநி நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்றை தடுக்கும் பணிக்காக வீடு வீடாக சென்று மருந்து தெளிப்பதற்கும். கட்டுப்பாட்டுப்பகுதிகளில் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டாடா ஏசி வாகனம் மூலம் மருந்து தெளிப்பதற்கும் பயன்படும் இயந்திரம் பயன்படுத்த இயலாத அளவிற்கு பழுது ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி பழுதினை உடனடியாக ச செய்ய உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ரூ.17620/-க்கு வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவினத்தொகையை பொதுநிதியில் வழங்கவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.
2. அவசர அவசியத்தை கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

16) பழநி நகராட்சி பொறியர் பிரிவின் பயன்பாட்டில் TN 57 AT 3258 வாகனத்திற்கு 2021-2022-ம் ஆண்டிற்கான வருடாந்திர காப்பீடு தொகை செலுத்த வேண்டி உள்ளதால் காப்பீட்டு தொகைக்கான உத்தேச செலவீனம் ரூ.12784/-(ரூபாய் பன்னிரெண்டாயிரத்து எழுநூற்று எண்பத்தி நான்கு மட்டும்)

நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனி லிட்., பழநி நிறுவனத்திற்கு காப்பீட்டுத்தொகை செலுத்தி புதுப்பிக்கவும் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றப்பொருள் தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி காப்பீட்டு தொகையினை நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., பழநி என்ற நிறுவனத்தில் பொதுநிதியின் மூலம் செலுத்திட அனுமதிக்கலாம்.(ந.க.எண்.4948/2021/இ2).

17) இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட குடிநீர் மாதிரிகளை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிடவும் அதற்கான குடிநீர் பரிசோதனை ஆய்வுக் கட்டணம் ரூ.8260/-க்கான வங்கி வரைவோலையை திரு.கௌதம் என்பவரின் பெயரில் பணம் செலுத்தப்பட்டு அதற்கான செலான் இணைக்கப்பட்டுள்ளது.(வங்கி வரைவோலை எண்.510449 நாள்.18.06.2021 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பழநி) எனவே மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| S.no | Samples From | Quantity |
|---|---|---|
| 1 | SS Tank Taw water | 1 |
| 2 | SS Tank Clear water | 1 |
| 3 | Palaru Dam Raw water | 1 |
| 4 | Palaru Dam Clear water | 1 |
| 5 | Compost Yard | 1 |
| | Total | 5 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கொண்ட செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணம் செலுத்தியதையும் ஏற்கலாம்.

18) பழநி நகராட்சிக்கு சொந்தமான ராஜாஜி சாலையில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் புதிய சமையல் அறை, முன்புறம் கழிவறை மற்றும் தெற்கு பக்கம் முன்புறம் கழிவறை மற்றும் தெற்கு, பக்கம் முன்புறம் ஒரு கடை அமைக்கும் பணிக்கு பொது நிதி 2020-2021-ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.50/- இலட்சத்திற்கு 18.08.2021-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | திரு.M.ராமசாமி(நகராட்சி ஒப்பந்த்தாரர்) 101/2, பாட்டாளி தெரு, பழநி. | 0.15% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9000/- சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/20-21/0007213 நாள்.02.02.2021 |
| 2 | திரு.R.ரவிக்குமார், த/பெ.ரெங்கசாமி, 16/192,பாட்டாளி தெரு மெயின் ரோடு,பழநி. | 0.32% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9900/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1ல்கண்டுள்ளஒப்பந்ததாரர்திரு.M.ராமசாமி (நகராட்சி ஒப்பந்த்தாரர்)101/2, பாட்டாளி தெரு, பழநி.என்ற நிறுவனம்-என்பவர் -0.15 % சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.(ந.க.எண்.123/2019/இ1).

19) பழநி நகராட்சிக்கு சொந்தமான விவேகானந்தர் தெருவில் அமைந்துள்ள ஓட்டுநர் குடியிருப்பு மராமத்து மேற்கொள்ளும் பணிக்கு பொது நிதி 2021–2022–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00/– இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 27.08.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1 | திருமதி.K.ரேணுகா தேவி<br>1,பூலாம் பட்டி,<br>பழநி. | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.2000/– சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21–22/0003561 நாள்.26.08.2021 |
| 2 | திரு.N.கருப்புச்சாமி,<br>TKN புதூர்<br>ஆயக்குடி | 0.23% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.2000/– சலான் எண்.ந.செ.சீ.எண்.080/1/1/21–22/0003563 நாள்.26.08.2021 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1ல்கண்டுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.K.ரேணுகா தேவி 1,பூலாம் பட்டி,, பழநி.என்ற நிறுவனம்– என்பவர் –0.01 % சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மதிப்பீட்டை விடகுறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.(ந.க.எண்.123/2019/இ1).

20) பழநி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 266 மின் விசைப்பம்புகள் மக்களின் பயன்பாட்டிற்கு உள்ளது. மின்விசைப்பம்புகளை மக்கள் அன்றாடம் பயன்படுத்தி வருகிறார்கள் தற்போது மீட்டர் பாக்ஸ் ஒருபுறமும், மின்மோட்டார் ஒருபுறமும் உள்ளது. மின் வயர்கள் சாலையின் ஓரத்தில் பதிக்கப்பட்டுள்ளது. சாலையில் பாதசாரிகள் நடந்து செல்லும்போது பழுதான மின்வயர்களை மக்கள் மிதிக்கும் சூழ்நிலை உருவாகிறது இதனால் பொது மக்கள் அச்சத்துடனே தண்ணீர் பிடித்து செல்கின்றனர், எனவே மீட்டர் பாக்ஸ் மின்மோர்க்கு அருகிலேயே பொருத்துவதற்கு பொதுமக்கள் கேட்டுகொண்டதற்கிணங்க உத்தேச செலவினம் ரூ.9.90/–இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

21) பழநி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.7–ல் உள்ள வடிகால் மற்றும் குறுகிய சந்துகளில் JICA DI பைப்லைன்களுக்காக தோண்டப்பட்ட பள்ளம் மின்வேலியாக காட்சியளிக்கிறது. மேலும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி வடிகால் மற்றும் சாலைகளை சீர் செய்ய புகார் வந்த வண்ணம் உள்ளது.எனவே சாலையினை சீர் செய்ய மதிப்பீடு ரூ.9,80,000/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ளலாம்.

22) பழநி நகராட்சிக்குட்பட்ட 10,11 வார்டுகளில் உள்ள வடிகாலின் மேல் உள்ள பாலம் சேதமடைந்தும், இல்லாமலும் உள்ளது. இதனால் போக்குவரத்து மிகவும் சிரமமாக உள்ளது. எனவே தெருக்களில் உள்ள 7 பாலங்களை புதிதாக அமைக்கவும் சிமெண்ட் சாலைகளை சீர் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/–க்கு நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

23) பழநி நகராட்சிக்கு சொந்தமான பாய்கடை சந்து மற்றும் சங்கிலி சந்து ஆகிய தெருக்களில் ஜிக்கா திட்டத்தின் கீழ் Distribution line பதிக்கப்பட்டதில் சாலையினை தோண்டி சாலை குண்டும் குழியுமாக உள்ளது. இதானல் பாதசாகள் நடந்து செல்வதற்கு முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தினமும் அப்பகுதி மக்களும், பாதசாகளும் புகார் கொடுத்த வண்ணம் உள்ளனர். எனவே இரு தெருக்களில்லும் சிமெண்ட் சாலையினை சீர் செய்ய ரூ.2,00,000/-இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

24) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 184/ 2021/ தி.ம.3 நாள். 25.06.2021ன்படி ம.வ./மா.ந.ஊ-அ (திண்டுக்கல் மாவட்டம்) எண்.52/2021 என எண்ணிடப்பட்டு திரு,என்.பாலா, திரு.வி.பழனிச்சாமி கதவு எண்.63, அக்ரஹாரம் 1-வது வார்டு, அ.கலையம்புத்தூர் கிராமம், பழனி தாலுகா ஆகியோர்களுக்கு சொந்தமான புல எண்கள் 1/1A, 1/1Bக்கு சம்மந்தப்பட்ட 1. 6125 ஏக்கர் (6525.50 ச.மீ) பரப்பளவு உள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளதை தொடர்ந்து மேற்படி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள புன்செய் விவசாயப் பகுதியிலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மாற்ற நில உபயோகமாற்ற பயன்பாட்டு கட்டணம் (6525.50ச,மீ) இடத்திற்கு அரசு வழிகாட்டு தொகை பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள புல எண்ணில் அனுமதிக்கப்பட்ட 37 மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1, மேற்கண்ட மனைப்பிரிவில் தார் சாலை மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் முதலான பணிகள் முடிவுற்றதாக நகராட்சி பொறியாளர் 30.09.2021ம் தேதியில் சான்று வழங்கியுள்ளார்.

2.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு மின்கம்பம் அமைக்க மனுதாரரால் மின்வாரியத்திற்கு தொகை ரூ.1,74,400/. செலுத்திய ரசீது எண். MDD291/ 08-21/589 நாள்.20.08.2021-ல் செலுத்தப்பட்டுள்ளது.

3. புன்செய் விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டுக்கான 3% கட்டணத்தொகை ரூ.7,06,000/- அரசுத்தலைப்பில் நாள். 29.09.2021ன்படி வரவாக்கப்பட்டுள்ளது.

4. பரிசீலனைக்கட்டணம்நகராட்சிகருவூலகத்தில்ரூ.1000/-செலுத்தப்பட்டுள்ளது.

5. பொது ஒதுக்கீடு நீங்கலாக மனைப்பிரிவில் சாலையிடம் (மூலை முடுக்குகள் உட்பட) 2282.65ச.மீ மற்றும் 21.50 ச.மீ நகராட்சி உபயோக இடமும் தானபத்திரம் எண்.1693/2021 நாள். 23.06.2021ல் பழனி நகராட்சிக்கு தான ஒப்படைப்பு ஆவணம் பெறப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவு ஒப்புதல் தொடர்பான பணிகள் நிறைவு செய்வதால், இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கப்பட்டது

25) நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் சமுதாயக்கூடத்தில் அமைந்துள்ள கிணற்றினைச் சுற்றி நடைபாதை அமைக்கவும், ராஜா நகர் பூங்காவில் தண்ணீர் வசதி மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு பொது நிதி 2021-2022-ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.60/-இலட்சத்திற்கு மேற்கொள்ள 13.07.2021-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம் |
|---|---|---|
| 1. | திரு.K,சாமிதுரை,<br>S/o.கருப்பண்கவுண்டர்,<br>123,T.K.N. புதூர், | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு ரூ.3600/- |

| | | |
|---|---|---|
| | ஆயக்குடி அஞ்சல்,<br>பழநி தாலுகா. | |
| 2. | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ.R.ரெங்கசாமி,<br>16/195,பாட்டாளி தெரு,<br>அடிவாரம்,<br>பழநி–624601 | 2.39%– மதிப்பீட்டிற்கு அதிகம் ரூ.3600/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு. K,சாமிதுரை, என்பவர் –0.01% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :** குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.08 –10–2021

தனி அலுவலர்/**ஆணையாளர்**
பழனி நகராட்சி.